கர்த்தரைத் துதியுங்கள்
Praise the Lord
Album 36 Song 4

Song 4 கர்த்தரைத் துதியுங்கள்

147 சங்கீதம்

Psalm 147 calls all to praise the Lord for rebuilding Jerusalem, healing the brokenhearted, numbering the stars, providing rain and food, and giving His word and statutes uniquely to Israel.

கர்த்தரைத் துதியுங்கள்
தேவனைப் பாடுங்கள்
நல்லது நல்லது துதித்தலே நல்லது
இன்பம் இன்பம் துதித்தலே இன்பம்

எருசலேமை கட்டுகிறார் கர்த்தர்
துரத்துண்ட இஸ்ரவேலரைக் கூட்டிச்சேர்க்கிறார்
நொறுங்குண்டவனை குணமாக்கும் கர்த்தர்
அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார்

கர்த்தரைத் துதியுங்கள்
தேவனைப் பாடுங்கள்
நல்லது நல்லது துதித்தலே நல்லது
இன்பம் இன்பம் துதித்தலே இன்பம்

நட்சத்திரங்களை எண்ணி பேரிட்டழைக்கிறார் கர்த்தர்
பெரியவரும் மகா பெலமுள்ளவருமாயிருக்கிறார்
அளவில்லா அறிவுடையவர் கர்த்தர்
சாந்த குணமுள்ளவர்களை உயர்த்துகிறார்

கர்த்தரைத் துதியுங்கள்
தேவனைப் பாடுங்கள்
நல்லது நல்லது துதித்தலே நல்லது
இன்பம் இன்பம் துதித்தலே இன்பம்

வானத்தை மேகங்களால் மூடுபவர் கர்த்தர்
பூமிக்கு மழையை ஆயத்தம் செய்கிறார்
மலைகளில் புல்லை முளைப்பிக்கின்றார் கர்த்தர்
மிருக ஜீவன்களுக்கும் ஆகாரங்கொடுக்கிறார்

கர்த்தரைத் துதியுங்கள்
தேவனைப் பாடுங்கள்
நல்லது நல்லது துதித்தலே நல்லது
இன்பம் இன்பம் துதித்தலே இன்பம்

குதிரையின் பலத்தில் விருப்பமாயிரார் கர்த்தர்
வீரனுடைய கால்களில் பிரியப்படமாட்டார்
தமக்கு பயந்தவர்கள்மேல் பிரியமாகிறார் கர்த்தர்
தமது கிருபைகளை அள்ளித் தருகிறார்

கர்த்தரைத் துதியுங்கள்
தேவனைப் பாடுங்கள்
நல்லது நல்லது துதித்தலே நல்லது
இன்பம் இன்பம் துதித்தலே இன்பம்
உன் வாசல்களின் தாழ்ப்பாள்களைப் பலப்படுத்திடும் கர்த்தர்
உன்னுடைய பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார்

உன் எல்லைகளை சமாதானமாக்குகிறார் கர்த்தர்
உச்சிதமான கோதுமையினால் திருப்திப்படுத்துவார்

கர்த்தரைத் துதியுங்கள்
தேவனைப் பாடுங்கள்
நல்லது நல்லது துதித்தலே நல்லது
இன்பம் இன்பம் துதித்தலே இன்பம்

வார்த்தைகளை பூமிக்கு அனுப்புகிறார் கர்த்தர்
அவருடைய சொல்லை தீவிரப்படுத்துகிறார்
பஞ்சைப்போல் உறைந்த மழையைத் தருகிறார் கர்த்தர்
சாம்பலைப்போல உறைந்த பனியைத் தூவுகிறார்

கர்த்தரைத் துதியுங்கள்
தேவனைப் பாடுங்கள்
நல்லது நல்லது துதித்தலே நல்லது
இன்பம் இன்பம் துதித்தலே இன்பம்

கல்மழையைத் துணிக்கைகளாக அனுப்புகிறார் கர்த்தர்
அவருடைய குளிருக்கு முன்பாய் நிற்பவன் யார்?
காற்றை வீசும்படி செய்கிறார் கர்த்தர்
பனியை உருக்கி தண்ணீராக ஓடச்செய்கிறார்

கர்த்தரைத் துதியுங்கள்
தேவனைப் பாடுங்கள்
நல்லது நல்லது துதித்தலே நல்லது
இன்பம் இன்பம் துதித்தலே இன்பம்



யாக்கோபுக்கு வசனத்தை அறிவிக்கிறார் கர்த்தர்
இஸ்ரவேலுக்கு பிரமாணங்களை அறிவிக்கிறார்
எந்த ஜனத்திற்கும் இப்படி செய்யவில்லை கர்த்தர்
அவருடைய நியாயங்களை அறிந்துக்கொள்வோமா?

கர்த்தரைத் துதியுங்கள்
தேவனைப் பாடுங்கள்
நல்லது நல்லது துதித்தலே நல்லது
இன்பம் இன்பம் துதித்தலே இன்பம்
கர்த்தரைத் துதித்தலே நல்லது
கர்த்தரைத் துதித்தலே இன்பம்

HOLY BIBLE
AUDIO RELEASE